[1981 பிப்ரவரி 6

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

191. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலத்தை ஒருவகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வருவாய்த் துறையின் 4—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2316 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

192. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் I,II, ஆம் விவர அட்டவணைகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 23—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற 926 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது)).

193. வழங்கு இருப்பு மின்மாற்றி எண்ணெயினை பெட்ரோ-இரசாயன நிறுவனத்திற்கு விற்பனை செய்வதன் மீதும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 450 கிலோ லிட்டர் மின்மாற்றி எண்ணெயினை விற்பனை செய்வதன் மீதும் செலுத்தத்தக்க விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து, வணிகவரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 3—11—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1156 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

194. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 28—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1114 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

1981 பிப்ரவரி 6]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*31. 1981 ஆம் ஆண்டு பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1981).

*32. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வரிசெலுத்துவதை மறுக்குமாறு அல்லது தள்ளிப்போடுமாறு தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண். 11/1981).

*33. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 12/1981).

*34. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/1981)

@35. 1974—75 மற்றும் 1975—76 ஆம் ஆண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்த பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை (தமிழ்).

---

* 4—2—1981 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.
@ 5—2—1981 அன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TAMIL NADU LEGISLATIVE LIBRARY
16 SEP 1981
MADRAS-600 009